# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 18, 2022 Weekly E-paper ● June 18, 2022




# "ஆளுநரே வெளியேறுக" அதிர்ந்தது ஆர்ப்பாட்டம்

சுப.வீரபாண்டியன்

## 'புல்டோசர்' வெள்ளிக்குப்பின் சனி வரும்?

சாரதாதேவி

## இதுஒரு நல்ல தொடக்கம் !

தலையங்கம்

## காவிமயத் திட்டமா அக்கினி பாத்?

மதிவாணன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ●திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜூன் 18, 2022 Weekly E-paper ● June 18, 2022

# “ஆளுநரே வெளியேறுக” அதிர்ந்தது ஆர்ப்பாட்டம்

**சுப.வீரபாண்டியன்**




கடந்த வியாழன் (16.06.22) அன்று சென்னை, எழும்பூர் ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம் அருகில், தமிழர் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் தலைமையில் ஆளுநரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

நீதிபதி அரி பரந்தாமன், கலி. பூங்குன்றன், சுப. வீரபாண்டியன், அருள்மொழி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற அந்தப் போராட்டத்தில் கருஞ்சட்டைப் படை தன் கண்டனத்தைப் பதிவு செய்தது. இந்த ஆளுநர் எங்களுக்கு வேண்டாம் என்றும், இனி ஆளுநர் என்ற பொறுப்பே வேண்டாம் என்றும் அவர்கள் முழக்கமிட்டனர்.

மனிதர்களுக்குள் வருண பேதத்தை ஏற்படுத்தி, ஏற்றத்தாழ்வுகளை நிலைக்கச் செய்யும் சனாதன தர்மத்தை ஆளுநர் வரவேற்பதும், வலியுறுத்துவதும் அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரானது என்றும், சனாதன தர்மம் என்றால் அது வர்ண தர்மம்தான் என்பதை பனாரஸ் இந்து பல்கலைக்கழகமே ஒப்புக் கொண்டிருக்கிறது என்றும் சான்றுகளை எடுத்துவைத்து ஆசிரியர் உரையாற்றினார்.

2020ஆம் ஆண்டு தொடங்கி, இன்று வரையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள 21 மசோதாக்களை, ஊறுகாய் ஜாடியில் ஊற வைத்துவிட்டு ஊரெங்கும் நடக்கின்ற கூட்டங்களில் பங்கேற்கச் செல்கின்றார் ஆளுநர் என்றார் ஆசிரியர். செய்யவேண்டிய தன் வேலையைச் செய்யாமலும் வேண்டாத வேலைகளை எல்லாம் செய்து கொண்டிருப்பதாகவும் ஆளுநர் மீது அவர் குற்றம் சாட்டினார்

நீதிபதி அரிபரந்தாமன் அவர்கள் தன் கண்டன உரையில், இந்திய அரசமைப்புச் சட்டம் 200 ஆவது பிரிவின் கீழ், ஓர் ஆளுநர் சட்டமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களை ஆறு வாரத்திற்குள் குடியரசுத் தலைவருக்கு அனுப்பிவிட வேண்டும் என்றுதான் முதலில் இருந்தது என்றும், அந்தக் கால அவகாசம் கூடுதலாக இருக்கிறது என்று கருதி, பிறகு திருத்தப்பட்டதாகவும் எடுத்துச் சொன்னார். ஆறு வார காலம் என்பதைக் கூடிய விரைவில் என மாற்றம் செய்தனர். ஆனால் நம் ஆளுநரோ இரண்டு ஆண்டுகளாகியும் சில மசோதாக்களை அனுப்பாமல் வைத்திருப்பது அரசமைப்புச் சட்டத்தையே அவமதிப்பது ஆகும் என்றார்.

ஆளுநரிடம் இருந்து அரசமைப்புச் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய நிலையும், ஆளுநரைத் தன் வேலையைச் செய்யுமாறு கெஞ்சிக் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையும் தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ளது, மிகப்பெரிய துயரம் என்று அங்கே சொல்லப்பட்டது.




தோழர் முத்தரசன் கூறியிருப்பது சரியானது! ஆர்.என். ரவி அவர்களுக்கு தன் கருத்தை எடுத்துச் சொல்ல எல்லா உரிமையும் இருக்கிறது. அவர் சனாதனத்தை, வைதீகத்தை வலியுறுத்துவது குறித்து நமக்கு எந்தக் கவலையும் இல்லை. ஆனால் அண்ணாமலை போலத் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டுப் பிறகு எதை வேண்டுமானாலும் பேசட்டும். அப்படியில்லாமல் இரட்டை வேடம் இனியும் வேண்டாம். ஆளுநர் அவர்களே, ஒன்று நீங்கள் ஆளுநராக இருங்கள் அல்லது அசல் பார்ப்பனராக இருங்கள். இரண்டுமாக இருப்பது நாட்டுக்கும், உங்களுக்கும், நல்லது இல்லை.

# ‘புல்டோசர்’ வெள்ளிக்குப்பின் சனி வரும்?

● சாரதாதேவி

நாட்டில் திடீரென்று புல்டோசர்களுக்கு ‘கிராக்கி’ அதிகமாகிவிட்டது. நாடெங்கும் இசுலாமியக் குடியிருப்புகள் அனுமதியின்றிக் கட்டப்பட்டுள்ளதாக இப்போது கண்டுபிடித்துவிட்டார்கள். அறிவிப்போ, பேச்சுவார்த்தையோ, நிவாரணங்களோ, சட்ட வழிகளோ இல்லாமல் அடைத்துவிட்டு, இசுலாமியர்களின் வீடுகளை இடிக்கக் கிளம்பிவிட்டார்கள் சங்கிகளின் விசுவாசிகள்!

எப்படித் தொடங்கியது இந்த அரசியல்? கடந்த மார்ச் மாதம் “கஷ்மீர் ஃபைல்ஸ்” என்ற ஒரு திரைப்படம் வெளியிடப்பட்டது. காசுமீரத்தில் பார்ப்பனர்கள் தாக்கப்பட்ட நிகழ்வுகளைச் சொன்ன அந்தப் படத்தைப் புகழ்ந்து, உண்மை பல தடைகளைக் கடந்து வெளிவந்துவிட்டதாகப் பூரித்தார் இந்தியப் பிரதமர் மோடி அவர்கள். அடுத்த சில வாரங்களிலேயே, முதலில் பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசத்தில், கார்கோன் மாவட்டத்தில், 10.04.2022 அன்று நடந்த ராம நவமி ஊர்வலத்தில் தொடங்கியது இந்த பயங்கரவாதம். கலவரங்களை ஏற்பாடு செய்து, அதன் விளைவாக 50க்கு மேற்பட்ட இசுலாமியர்களின் வீடுகளை இடித்துத் தள்ளினார்கள். கேட்டால் அவை அனுமதியின்றிக் கட்டப்பட்ட வீடுகள் என்றார்கள். அடுத்து உள்ளாட்சி அதிகாரத்தை பா.ஜ.க. கைப்பற்றி இருக்கும் டெல்லியில் ஜஹாங்கீர்புரியில் 20.4.2022 அன்று இந்த பயங்கரத்தைத் தொடர்ந்தார்கள். இந்திய மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் திரு.பிருந்தா காரத் அவர்கள் ஓடோடிச் சென்று உச்ச நீதிமன்றத்தில் தடை ஆணை வாங்கி வந்தும், சில வீடுகளைக் காப்பாற்ற முடியவில்லை.

இப்போது உத்தரபிரதேசத்தில் இரண்டு முக்கிய இசுலாமியர்களின் வீட்டை இடித்தபின், ஜூன் 12 ஆம் நாள் அஃப்ரீன் ஃபாத்திமாவின் தாயின் வீட்டை அவர்கள் இடித்துத் தள்ளி இருக்கிறார்கள். அஃப்ரீன் பாத்திமா ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்து வித்தான விளைச்சல்! ஆளும் பா.ஜ.க.வின் பாசிச நடவடிக்கைகளுக்கு எதிராக இவர் எழுப்பிய குரல்களால் குறித்து வைக்கப்பட்டவர் இவர். இவரது தந்தை இசுலாமிய அமைப்பொன்றில் தலைவராக உள்ளார். போதாதா உத்தரபிரதேச அரசுக்கு? நபிகள் நாயகம் குறித்து கடந்த மே26 அன்று, நூபுர் ஷர்மா ஒரு தொலைக்காட்சியில் பேசிய அவதூறுப் பேச்சுக்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை ஒருங்கிணைத்ததற்காக, அவர்களுக்கு அளிக்கப்படும் தண்டனையாக அவர்கள் வீட்டை இடித்துத் தள்ளி உள்ளார்கள்! ஆம்! அந்த மாநிலத்தின் முதலமைச்சரும், உள்துறை அமைச்சரும் அப்படியே சொல்கிறார்கள்!

ஆர்ப்பாட்டக்காரர்களின் வீடுகள் இடிக்கப்படுவது என்பது இதுவரை வரலாறு காணாத பாசிச வடிவம். அனுமதியின்றிக் கட்டப்பட்ட வீடுகளே இடிக்கப்படுகின்றன என்று நியாயம் கற்பிக்கிறார்கள். அனுமதி அற்ற வீடென்று அறிவிக்கவே இல்லை என்று சொல்வீர்களானால், இரவு அறிவிப்பை ஒட்டி, காலை இடிக்க வந்து விடுவார்கள். சனநாயக அடிப்படையிலோ, இயற்கை நீதியின் அடிப்படையிலோ, கால அவகாசம் கோரமுடியாது. சட்ட நடவடிக்கைகள் ஏதும் பின்பற்றப்படமாட்டா. “கேங்க்ஸ்டர் சட்டம்” எனும் மாநிலத்தின் சிறப்புச் சட்டத்தின் படி எல்லா விதிகளும் மீறப்படும்.



அருமை வாசகர்களே, நுபுர் ஷர்மா என்ற ஒரு பார்ப்பனப் பெண்ணைக் கைது செய்யாமல் பாதுகாக்க, உலக நாடுகளுக்குக் கொடுத்த எல்லா வாக்குறுதிகளையும் காற்றில் பறக்கவிட்டு, ஆளும் இந்துத்துவ அரசு எப்படிப்பட்ட ஒடுக்குமுறையையும் கையாளும் என அவர்கள் மக்களைப் புரிந்து கொள்ளச் செய்கிறார்கள்! மையத்தில் நின்று இயக்கும் பார்ப்பனீயத்திற்கு மோடியும் பயந்து தான் ஆக வேண்டும் என அவர்கள் சொல்கிறார்கள். “மோடி போனால் எங்களுக்கு யோகி” என்று அவர்கள் சொல்கிறார்கள்.

அவர்கள் இதை மட்டும் சொல்லவில்லை. இசுலாமியர்கள் மாட்டுக்கறி உண்ணக்கூடாது என்று அவர்கள் முதலில் சொன்னார்கள். வீடு புகுந்து குழம்புச் சட்டியில் கைவிட்டு மாட்டுக்கறி தின்பவர்களை அடித்துக் கொன்றார்கள். இரயிலில் மாட்டுக்கறி தின்றதாக இசுலாமியப் பயணிகளை அடித்துக் கொன்றார்கள். அவர்களுடைய உணவை நிம்மதியாக உண்ண விடாமல் செய்த பின்னர், அவர்கள் ஹிஜாப் அணிவது தவறு என்றார்கள்! ஹிஜாப் அணிந்தால் கல்வி கற்க முடியாது என அவர்கள் அச்சமூட்டினார்கள்.

உணவு, உடையில் கை வைத்த பின்னர், அவர்கள் இப்போது இசுலாமியரின் வீடுகளுக்குக் குறி வைத்துள்ளார்கள்! எதிர்த்து கேள்வி கேட்டால், சன நாயக ரீதியாக ஒருங்கிணைந்தால், இருக்க வீடு இருக்காது என்கிறார்கள்! இசுலாமியரின் அடிப்படைத் தேவைகள் ஒவ்வொன்றாகப் பிடுங்குவதன் மூலம் இந்த நாட்டை, அவர்களுக்கு வாழ வக்கற்றதாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்! ஆம்! ஓடிவிடுங்கள் என்று சொல்லாமல் சொல்லி, மீண்டும் ஒரு பிரிவினை கோரும் இந்துத்துவாவின் அணுக்கமான திட்டத்தை அவர்கள் அரங்கேற்றிக் கொண்டுள்ளார்கள்.

உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தின் ஊடக ஆலோசகர் ம்ருத்துன்ஜெய் இப்படிச் சொல்கிறார் - “ஒவ்வொரு வெள்ளிக்கிழமைக்குப் பின்னரும் சனிக்கிழமை வரும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிந்துகொள்ளட்டும்” - இது இசுலாமியர் மீது ஒடுக்குமுறைகள் தொடரும் என்பதற்கான மறைமுக எச்சரிக்கை!.

உலகின் அத்தனை சனநாயக ஆற்றல்களையும் இந்து பாசிசத்திற்கு எதிராக ஒருங்கிணைக்க வேண்டிய நேரம் வந்தேவிட்டது.

திராவிட இயக்கத் தமிழர் பேரவை உள்ளிட்ட பெரியாரிய அமைப்புகள் சனநாயக ஆற்றல்களை ஒருங்கிணைக்கத் தொடங்கிவிட்டன. உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா அவர்களுக்கு, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதிகள் கே.சந்துரு, சாந்தி பூஷன், பிரசாந்த் பூஷன், ஏ. கே.கங்குலி, வி.கோபால கௌடா, பி.சுதர்சன ரெட்டி உள்ளிட்ட பல்வேறு நீதிபதிகளும், வழக்கறிஞர்களும் உத்தரபிரதேசத்தில் நடக்கும் இந்த அநீதிகளுக்கு எதிராக, தானாக முன்வந்து பதிந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என கடிதம் எழுதி உள்ளனர்.

நூபுர் ஷர்மா விடயத்தில் பன்னாட்டு கண்டனங்கள் ஓய்வதற்கு முன்பே, இந்த நடவடிக்கைகளால் உலகநாடுகளின் மனசாட்சியை மீண்டும் எழுப்பி உள்ளார்கள் சங்கிகள்!

ஆம் நாமும் சொல்வோம்! வெள்ளிக்கிழமைகளுக்குப் பின் சனிக்கிழமைகள் மட்டுமல்ல, நீங்கள் மதத்தின் பெயரால் செய்யும் அநீதிகளுக்குப் பின்பு, மக்கள் புரட்சியும் வரும்! பாசிஸ்டுகளின் முடிவுகளை மக்களே வரலாறு முழுதும் எழுதியிருக்கிறார்கள்! ●

# 15-06-2022 அன்று திராவிட நட்புக் கழகம் நடத்திய நுபுர் சர்மாவைக் கண்டித்த கண்டனக் கூட்டத்தில்




பேராசிரியர் சுப.வீரபாண்டியன்





திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பன்



வழக்கறிஞர் அஜிதா




ஊடகவியலாளர் விஜய சங்கர்




திராவிட நட்புக் கழகத்தின் மண்டலப் பொறுப்பாளர்கள்
தோழர் விஜயராணி, வழக்கறிஞர் இளஞ் சித்திரன்

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## இது ஒரு நல்ல தொடக்கம் !

2024 ஆம் ஆண்டு ஒன்றியத்தின் பொதுத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், குடியரசுத் தலைவர் தேர்தல் 2022இல் நடைபெற இருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சி தன் வேட்பாளரை நிறுத்தி வெற்றி பெறச் செய்திட முயன்று வருகிறது.

இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் வாக்குகள் சிதறாமல், ஒரு பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற முடிவில் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி எதிர்க்கட்சிகளுக்கு ஓர் அழைப்பு விடுத்தார்.

அழைப்பை ஏற்று 15-06-2022 அன்று டில்லி அரசியலமைப்பு மன்றத்தில் தி.மு.க, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், சமாஜ்வாதி, ராஷ்ட்ரிய ஜனதா தளம், ராஷ்ட்ரிய லோக்தளம், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், சிவசேனா, தேசிய மாநாடு கட்சி, மக்கள் ஜனநாயகக் கட்சி, மதச்சார்பற்ற ஜனதா தளம், ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக், புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி என 17 கட்சிகள் மம்தா பானர்ஜி தலைமையிலான அக்கூட்டத்தில் கலந்து கொண்டன.

இந்தக் கூட்டத்தில் பா.ஜ.க வேட்பாளரைத் தோற்கடிக்க எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளராக சரத் பவார் முன் நிறுத்தப் பட்டாலும் அவர் மறுத்து விட்டார். எதிர்வரும் 21 ஆம் நாள் சரத் பவார் தலைமையில் மீண்டும் கூடி முடிவெடுக்க உள்ளன எதிர்கட்சிகள்.

ஒன்றிய அரசின் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த வாக்கு மதிப்பு 10.86 இலட்சம்.

இதில் பா.ஜ.க தலைமையிலான கூட்டணிக்கு 48 விழுக்காடு வாக்கு மதிப்பு இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

எனவே எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவும், சிதறாத வாக்குகளால் மட்டுமே பா.ஜ.க வின் வெற்றியைத் தடுக்க முடியும், தடுக்க வேண்டும்.

எதிர்க்கட்சிகள் நாட்டின், மக்களின், நலன் கருதி, கிடைத்துள்ள வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் குடியரசுத் தலைவர் தேர்தலில் வெற்றி பெற வேண்டும்.

பா.ஜ.க தோல்வியைத் தழுவ வேண்டும்!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120. என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,


தொலைபேசி: 044-2472 6408

# சிலைக்கு அஞ்சும் சிற்றினம்!

● வெற்றிச்செல்வன்

திருவண்ணாமலையில் அமையவிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி அவர்களின் உருவச்சிலைக்குத் தடை கோரிய வழக்கு, சென்னை உயர்நீதிமன்றத்தால் சில நாட்களுக்கு முன்னர் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. பக்தர்களுக்குப் பாதிப்பு ஏற்படும், நீர்நிலைகளுக்குப் பாதிப்பு, பட்டா இல்லை என்று இல்லாத காரணங்களைக் கூறித் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அவ்வழக்கு.

தலைவர்களின் பிறந்த அல்லது நினைவு நாட்களில் அவர்களின் சிலைகளுக்கு மரியாதை செலுத்துவது, அவர்களின் சித்தாந்தங்களை நினைவூட்டுவதற்காகவும், அவற்றின்வழி நடப்பதற்காகவுமே. அவ்வகையில் தமிழ்நாட்டிற்கும், சிலைகளுக்கும் நெடிய வரலாற்றுத் தொடர்பும், மரபும் உண்டு. ஆனால் வெறும் கல்லால் ஆன சிலைகளைக் கண்டு காவிகள் கலங்குவது தொடர்ந்து தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. சிலைகளை உடைப்பேன் என்று கூறுவது, பின்னர் எதிர்வினையைக் கண்டு அஞ்சிப் பின்வாங்குவது, காவி வண்ணம் பூசுவது என்று பெரியாரின் சிலையைக் கண்டு அவர் இறந்து 50 ஆண்டுகள் ஆகப் போகிறபோதும் அஞ்சுகின்றனர் கோழைகள். தற்போது வழக்குத் தொடுத்திருப்பதும் அதனோடு சேர்ந்ததுதான். ஆனால் கலைஞர் சிலை குறித்தே ஒரு வரலாறு எழுதப்படும் அளவுக்குப் பெருமிதம் உடையது அவரின் சிலை




வரலாறு.

1971-ம் ஆண்டு, ஆகஸ்ட் 24-ம் தேதி பெரியார் திடலில் அப்போது முதல்வராக இருந்த கலைஞருக்கு நடத்தப்பட்ட பாராட்டு விழாவில் கலந்துகொண்ட தந்தை பெரியார், "யார் யாருக்கோ சிலை இருக்கிறது. செயற்கரிய செயல்களைச் செய்த முதல்வர் கலைஞருக்குச் சென்னையில் சிலை வைக்கப்பட வேண்டும்" என இரண்டாவது முறையாகக் 'கலைஞருக்குச் சிலை வைக்க வேண்டும்' என்ற கோரிக்கையை முன்வைத்தார். இந்தக் கோரிக்கையை மேடையில் அமர்ந்திருந்த குன்றக்குடி அடிகளார் உள்ளிட்ட பலர் ஆமோதித்தனர்.

சிலை அமைப்புக்குழுவையும் பெரியார் அதே மேடையில் அறிவித்ததோடு, முதல் நபராக நன்கொடை கொடுத்துப் பணியையும் ஆரம்பித்து வைத்தார். சிலை அமைக்கும் குழுவின் புரவலராகப் பெரியார் இருந்தார். தலைவராகக் குன்றக்குடி அடிகளார் இருந்தார். துணைத் தலைவராக இன்றைய திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் இருந்தார்.

பெரியாரின் மறைவுக்குப் பிறகு, அன்னை மணியம்மையார் முயற்சியால் கலைஞருக்கு 21.9.1975 அன்று எல்.ஐ.சி அருகில் சிலை திறந்து வைக்கப்பட்டது. அன்னை மணியம்மையார் தலைமையில் குன்றக்குடி அடிகளார் திறந்துவைத்தார். முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். இறந்தபோது, அ.தி.மு.க.வினர் சிலரால் அச்சிலை உடைக்கப்பட்டது. அப்போது கலைஞர் எழுதினார்.

*உடன்பிறப்பே,*

*செயல்பட விட்டோர்*

*சிரித்து மகிழ்ந்து நின்றாலும்*

*அந்தச் சின்னத் தம்பி*

*என் முதுகில் குத்தவில்லை,*

*நெஞ்சிலேதான் குத்துகிறான்*

*அதனால் நிம்மதி எனக்கு!*

*வாழ்க! வாழ்க!!*

இந்தப் பெருந்தன்மைதான் திராவிடப் பெருந்தகையாளர் பண்பு. கொள்கைக் குன்றாக் கலைஞரின் மாண்பு. அதனால்தான் அத்தகைய கொள்கையாளரின் சிலையை அண்மையில் குடியரசுத் துணைத் தலைவர் வெங்கைய நாயுடு திறந்து வைத்தபோது, அதற்கு அவர் பொருத்தமானவர்தானா என்ற கேள்வி கலைஞரை நேசிப்பவர்களிடம் எழுந்தது.

சிலைகள் நமக்கு சித்தாந்தத்தைச் சொல்லிக் கொடுக்கின்றன. சிலருக்கோ அவை அச்சமூட்டுகின்றன. அவ்வளவுதான் வேறுபாடு. ●

# காவிமயத் திட்டமா அக்கினி பாத்?

● மதிவாணன்

அக்னிபாத் திட்டத்தை எதிர்த்து இரயில்கள், பேருந்துகள் தீக்கிரையாகி எறிகின்றன. உடைந்து நொறுங்குகின்றன. வட இந்தியா முழுவதும் போராட்டங்கள். குறிப்பாக பீகார், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஹரியானா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் இளைஞர்கள் பட்டாளத்தின் நிலை கட்டுப்பாடுகளுக்கு முற்றிலுமாக அப்பாற்பட்டு மோடி அரசின் செயல்பாட்டை எதிர்க்கின்றனர். கடுமையான போராட்டங்களைக் கட்டுப்படுத்த முடியாமல் அரசுகள் திணறுகின்றன.

ஆயிரக்கணக்கான கிலோ மீட்டர்கள் உங்களை நடக்க வைத்தபோது வராத கோபம், புதைக்க இடமில்லாமல் கங்கைக்கரை ஓரம் அலைந்தபோது வராத கோபம், புதைக்க எரிக்க வழியில்லாமல் பிணங்களைக் கங்கையில் தூக்கிப்போட்டுப் போனபோது வராத கோபம், ஆக்ஸிஜன் சிலிண்டர் இல்லாமல் அல்லாடிய போது வராத கோபம் வட இந்திய இளைஞர்களுக்கு இப்போது மட்டும் எப்படி வந்தது?

வடஇந்தியாவின் கணிசமான இதர பிற்படுத்தப்பட்ட இளைஞர்கள் அதிகம் நம்பி இருக்கும் வேலைவாய்ப்பு இராணுவமே. பணிக்குப் பிறகு ஓய்வூதியம், காப்பீடு ஆகியவை கொடுக்கப்படும். பின் ஏதேனும் ஒரு நிறுவனத்தில் காவலாளியாகப் பணிபுரியும் வாய்ப்பும் பெறுவார்கள். இப்படிப்பட்ட நிலையில் நான்கு ஆண்டுகள் மட்டுமே இராணுவப் பணி என்ற அக்னிபாத் திட்டத்தால் இராணுவத்தில் நேரடியாக ஆள் எடுக்கும் முறை கைவிடப்படுமோ என்ற அச்சம் வடஇந்திய இளைஞர்களைப் பற்றிக் கொண்டது. அக்னிபாத் திட்டத்தில் 4 ஆண்டுகள் மட்டுமே பணியாற்றிய பின்னர் அதில் இருந்து 25% மட்டுமே நிரந்தரப் பணிக்கு எடுக்கப்படுவார்கள்.

எஞ்சிய 75% பேர்கள் வெளியேற்றப் படுவார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் உள்ளிட்ட எதுவும் கிடைக்காது.

இந்தத் திட்டத்தை எதிர்த்துக் காங்கிரஸ் உட்பட சில எதிர்க்கட்சியினர் அறிக்கை வெளியிட்டாலும் இளைஞர்கள் தன் எழுச்சியாகவே போராடுகின்றனர். எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் இளைஞர்களை அரவணைத்து சரியான திசையைக் காட்டி, அவர்களின் நியாயமான கோரிக்கைகளை வென்று கொடுக்க வேண்டும். "அந்த அதானியின் வேலைக்காரனிடம் சொல், இராகுல் வந்து சென்றார் என்று" என பஞ்ச் அடித்துக் கலக்கிய இராகுல்காந்தி, இது போன்ற நிகழ்வில் எதிர்க்கட்சியின் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை நிறுவவேண்டும் என்பது ஜனநாயகத்தின் மீது அக்கறை கொண்டோரின் எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

இதில் சில விஷயம் தெரிந்த நபர் முன்வைக்கும் சந்தேகங்களும் கவனிக்க வேண்டியதே. அதில் முதலாவது, நிரந்தரம் செய்ய இருக்கும் 25% பேரை எதன் அடிப்படையில் தேர்வு செய்வார்கள், இராணுவம் காவி மயம் ஆகுமோ என்ற அச்சத்தை எழுப்புகின்றார்கள். அதேவேளையில் நான்காண்டு கழித்து வெளிவரும் 75% பேர், தன் மீதி வாழ்க்கையை எதை நம்பி இருப்பார்கள் அல்லது என்ன செய்வார்கள்? பெருமளவு வேலையில்லாமல் இருக்க நேரிடும். சட்டம் ஒழுங்கு கெட்டுப் போக வழிவகை செய்துவிடும். இது போன்ற நிலையை மதவாத அமைப்புகள் பயன்படுத்திக்கொள்ள ஏதுவானதாகிவிடும். இராணுவப் பயிற்சி பெற்ற இளைஞர்கள் வேலையில்லா நிலையில் இந்துக்களை இராணுவ மயமாக்குவோம் என்று கூறும் காவி மதவாதிகள் உள்நாட்டில் கலவரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பாக அமையும் என்ற பெரும் இரு அபாயங்களை இதில் சுட்டிக் காட்டுகின்றனர். ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian